இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

தோமா அவரிடம், “ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றே எங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க நீர் போகுமிடத்துக்கான வழியை நாங்கள் எப்படித் தெரிந்துகொள்ள இயலும்?” என்றார். இயேசு அவரிடம், “வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை. நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள். இது முதல் நீங்கள் தந்தையை அறிந்திருக்கிறீர்கள். அவரைக் கண்டுமிருக்கிறீர்கள்” என்றார் . (யோவான் 14:5-7)

# பிறரன்பை ஊக்குவித்தது திருத்தந்தையின் ஹங்கேரி திருப்பயணம்

## செய்தியாளர்கள் புகழாரம்

**வத்திக்கான்:** ஹங்கேரியில் திருத்தந்தை மேற்கொண்ட மூன்று நாள் திருத்தூதுப்பயணத்தின்போது வழங்கிய உரைகளில், பிறரன்பு நடவடிக்கைகளுக்கான அழைப்பு மேலோங்கியிருந்ததாக செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.
ஏப்ரல் 28 வெள்ளிக்கிழமை காலை தனது 41ஆவது திருத்தூதுப் பயணத்தைத் தொடங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்நாட்டிற்கான தன் முதல் உரையில், கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்பவர்கள், நம்பிக்கையின் அடிப்படையில் நற்செய்தியால் ஈர்க்கப் பட்ட மனிதநேயத்தை வளர்ப்பதற்கும், தந்தையின் அன்பான குழந்தைகளாக நம்மை ஏற்றுக்கொண்டு சகோதரர் சகோதரிகளாக ஒருவரையொருவர் அன்புகூர்வதற்கும், ஒருவருக்கொருவர் சான்றுபகர்வதற்கும் அழைக்கப்படுகிறார்கள் என்பதை வலியுறுத்தினார்.

ஏப்ரல் 29, சனிக்கிழமையன்று, ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரிலுள்ள புனித எலிசபெத் ஆலயத்தில் ஏழைகள் மற்றும் புலம்பெயர்ந் தோரை சந்தித்த வேளை, அனைவரிடமும் குறிப்பாக, வறுமை, நோய் மற்றும் துயரத்தின் வலியை அனுபவிப்பவர்கள் மீது இரக்கம் காட்டுதல் வழியாக, சாட்சிய வாழ்வை நாமும் வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பிறரன்பு மொழியில் சரளமாகப் பேசக்கூடிய ஒரு திருஅவை நமக்குத் தேவை என எடுத்துரைத்தார்.
ஏப்ரல் 30, ஞாயிறு திருப்பலியில்



கத்தோலிக்கப் பல்கலைக்கழகத்தில் திருத்தந்தை

திருத்தந்தை வழங்கிய மறையுரையில், நமது வார்த்தைகளிலும், செயல்களிலும், அன்றாட நடவடிக்கைகளிலும், இயேசுவைப் போல, ஒரு திறந்த கதவாக இருப்போம் எனவும், இறைவனின் அன்பு மற்றும் மன்னிப்பின் அழகை அனைவரும் நுழைந்து அனுபவிக்க உதவும் ஒரு கதவாக இருக்க முயற்சிப்போம் எனவும் கேட்டுக்கொண்டார்

அதே நாளில் ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரின் அருகிலுள்ள Péter Pázmány கத்தோலிக்கப் பல்கலைக்கழகத்தில் கல்வி மற்றும் கலாச்சார உலகத்தினரை சந்தித்தபோது, உண்மையை அணுகுவதற் கான திறவுகோல் அன்பிலிருந்து ஒருபோதும் பிரிக்கப்படாத அறிவின் ஒரு வடிவமாக இருந்து, உறவு, மனத்தாழ்மை மற்றும் திறந்த, உறுதியான, வகுப்புவாத, துணிவான மற்றும் ஆக்கபூர்வமான அறிவைக் குறிக்கிறது எனவும், இதனை எடுத்துரைப்பதற்கும் நம்பிக்கையை வளர்ப்பதற்கும்தான் பல்கலைக்கழகங்கள் அழைக்கப்படுகின்றன எனவும் தனது உரையில் குறிப்பிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

புடாபெஸ்டில் உள்ள Péter Pázmány என்னும் கணினி மற்றும் உயிரிஅறிவியல் கத்தோலிக்கப் பல்கலைக் கழகமானது ஐரோப்பாவின் தனித்துவமான பல்கலைக் கழகமாகும். ஏனெனில் இது மின்னணு மற்றும் கணினி பொறியியல் படிப்பை மூலக்கூறு மற்றும் நரம்பியல் உயிரியல் மருத்துவத்துடன் ஒருங்கிணைத்து செயல்படுத்துகிறது.

ஹங்கேரிய அறிவியல் பல்கலைக்கழக உறுப்பினரான பேராசிரியர் தாமஸ் ரோஸ்காவின் வழிகாட்டுதலின் கீழ் ஏறக்குறைய முப்பது பன்னாட்டு அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பேராசிரியர்களால் உருவாக்கப் பட்ட பாடத்திட்டத்துடன், கணினி பொறியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. மனித உயிரியல், நரம்பியல் மற்றும் நோய் எதிர்ப்பு அமைப்புகளின் அறிவியலுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படு கின்றது.

# பினாங்கு மறைமாவட்டம் 38 ஆம் அருங்கொடை எழுச்சி மாநாடு

பாரிட் புந்தார்: **பினாங்கு மறை மாவட்டத் தின்** 38-வது தமிழ் கத்தோலிக்க அருங் கொடை மறுமலர்ச்சி எழுச்சி கூட்டம் கடந்த 4ஆம் தேதி ஒரு நாள் நிகழ்வாக பாரிட் புந்தார் புனித ஆரோக்கிய அன்னை ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

"மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்" என்ற கருப்பொருளில் காலை 8.30 மணிக்கு துவங்கிய அருங்கொடை மாநாட்டில் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் 1200க்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டு தூய ஆவியில் இறை புகழ் பாடி இறைவனை மாட்சிப்படுத்தினர்.

சுங்கை பட்டாணி ஜெபக் குழுவின் புகழ்ச்சி ஆராதனை ஜெபத்திற்கு பின் மாநாட்டு குழு தலைவர் ஜேசுதாஸ் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். எக்காளம் முழங்க திருப்பீடச் சிறுவர்களின் பவனியோடு செபமாலை, தேவ அன்னையின் திருசுரூபம் ஆலயத்திற்கு ஏந்தி வரப்பட்டது.



"அருங்கொடை, அருங்கொடை தூய ஆவியின் அருள் கொடை" மற்றும் “வல்லமையின் வடிவே” ஆகிய மாநாட்டு கருப்பொருளின் பாடல்களோடு மாநாட்டை பேரருட்தந்தை (Msgr) ஹென்றி ராஜூ திறந்து வைத்து உரையாற்றினார். மாநாட்டில் பங்கு கொண்டு சிறப்புரை ஆற்றும் குருக்களுக்குப் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது.

அருட்தந்தை ஜான் ஆனந்தன் OFM Cap அவர்களின் சொற்பொழிவுக்குப் பின், இறைவன், நற்கருணை, திருஅவை ஆகிய மூன்று தலைப்புகளில் தமிழகத்திலிருந்து வருகை தந்த அருள்திரு தந்தை ஆரோன் கருத்துமிகு அருளுரை ஆற்றினார்.

பிற்பகல் 3 மணிக்கு நற்கருணை ஆராதனை நடைபெற்றது. மாலையில் பினாங்கு மறைமாவட்ட மேதகு ஆயர் செஸ்தியன் பிரான்சிஸ் மாநாட்டில் கலந்து கொண்டு திருப்பலி கொண்டாடினார.

அருங்கொடை இயக்க மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவின் செயலாளர் செபஸ்தியன் பிள்ளை மாநாட்டில் கலந்து கொண்ட இறை மக்களுக்கும், பேருரை ஆற்றிய மறைத் தந்தை ஆரோன் மற்றும் திருப்பலி நிறைவேற்றிய மேதகு ஆயர் செபஸ்டியன் பிரான்சிஸ் அவர்களுக்கும், மாநாடு சிறப்புர நடைபெற உழைத்த அனைவருக்கும் நன்றி கூறியதோடு மாநாடு நிறைவுற்றது.

தேவ ஆவியின் வல்லமை பெற்றவர்களாய் மூவொரு இறைவனின் அருள் பெற்று இதயம் நிறைந்தவர்களாய், மாநாட்டில் கலந்து கொண்ட விசுவாசிகள் அனைவரும் வீடு திரும்பினர்.

*-A S பிரான்சிஸ், பினாங்கு*



திருப்பலிக்குப் பின் விடைபெற்றுச் செல்லும் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ், பங்குத்தந்தை அருள்திரு மார்ட்டின் அருளானந்து மற்றும் குருத்துவ மாணவர் ஜோர்ஜ் ஆகியோர்

# மறுபிறவி எடுப்பதில் ஏன் நமக்கு நம்பிக்கையில்லை? மறுபிறவி இல்லை என்று விவிலியத்தில் சான்றுகள் உள்ளதா?

இக்கேள்விக்கு பதில் கூறும் முன் இரண்டு சொற்களுக்கு பொருள் காண வேண்டும். அவை 'மறுபிறவி' மற்றொன்று 'மறுவாழ்வு' 'மறுபிறவி' என்பது, ஒருவர் இறந்தவுடன் அவர் மிருகமாகவோ அல்லது மனிதனாகவோ வேறொரு உருவம் எடுத்து மீண்டும் இவ்வுலகில் பிறப்பதாகும். 'மறுவாழ்வு' என்பது, ஒருவர் இறந்தவுடன் அவரது ஆன்மா உடலைவிட்டுப் பிரிந்ததும் ஆவியாகவே இருக்கும். அது புனிதம் பெற்றதும் இறைவனோடு வாழும் வாழ்வான நிலைவாழ்வை ஏற்கும், உருவம் ஏற்காது. இத்தகைய வாழ்வை 'புதுபிறப்பு' என்கிறோம்.

கிறிஸ்தவ இறையியலின் படி, நாம் மறுபிறவி எடுப்பதில்லை. அதாவது நாம் மீண்டும் வேறு ஒரு உருவம் எடுத்து இவ்வுலகில் பிறப்பதில்லை. சிலர், ஒவ்வொருவரும் இவ்வுலகில் ஏழு ஜென்மம் எடுக்கிறார்கள் என்பார்கள். அடுத்த பிறவியிலும் நீயே எனக்கு மகனாக பிறக்க வேண்டும் என்பார்கள். இத்தகைய நம்பிக்கை நமதல்ல.

எபிரேயர் 9:27-ல், 'மனிதர் ஒரே முறை சாவுக்கு உட்படுகின்றனர். பின்னர் இறுதித் தீர்ப்பு வருகிறது. இதுவே அவர்களுக்கு உள்ள நியதி என எழுதப்பட்டுள்ளது. மறுபிறவி பற்றி விவிலியத்தில் குறிப்பிடப்படுவில்லை. லூக்கா 23:43-ல், "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்" என்றுதான் இயேசு அந்த நல்ல கள்ளனுக்கு வாக்குறுதியளித்தார். மாறாக, " அடுத்த பிறவி எடுத்து நல்ல மனிதனாக வாழ்" என்று கூறவில்லை.

'மறுபிறவி' என்பது நமது நம்பிக்கைக்குப் புறம்பானது. திருமுழுக்கு யோவானைக் கூட சிலர் எலிசாவின் மறுபிறவி என்றார்கள் (யோவா 1:21). அவர் அக்கூற்றை மறுத்து, "நான் அவரல்ல" என்றார்.

இயேசுவும் மறுவாழ்வு பற்றியே போதித்தார். (காண்க யோவா 3:1-12, லூக்கா 20:27-38, 10:25-28). இறந்த ஒருவர் நாயாகவோ, எலியாகவோ, மனிதனாகவோ மறுபிறவி எடுக்கிறார் என்றால், இயேசு நமது பாவங்களுக்காக இறந்தார் என்பது அர்த்தமற்றதாகிவிடும். நமக்கு, "உயிர்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கைக் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்", (யோவான் 11:25) எனும் ஆண்டவராகிய இயேசுவின் பொன்மொழி மறுவாழ்வில் உறுதியளிக்கிறது.

மறுவாழ்வு எனும் நமது நம்பிக்கை குறித்து கத்தோலிக்க மறைக்கல்வி நூல் (CCC 1020) பின்வருமாறு அறிவுறுத்துகிறது

நிலைவாழ்வு என்றால் இறப்பிற்குப் பிறகு உடனே தொடங்கும் வாழ்வு ஆகும். இதற்கு முடிவே இராது. இதற்கு முன்பாக ஒவ்வொருவருக்கும் ஒரு தனி தீர்ப்பு உண்டு. வாழ்வோரையும் இறந்தோரையும் தீர்ப்பிடுகின்ற கிறிஸ்து அத்தீர்ப்பை வழங்குவார். இந்தத் தனித் தீர்ப்பு பொதுத் தீர்ப்பில் உறுதி செய்யப்படும் என்று விளக்கம் அளிக்கிறது.

மேலும், இயேசு கிறிஸ்து மாட்சிமையோடு இரண்டாம் முறை வரும்போது, அவரது உயிர்ப்பின் வல்லமையால், இறைவன் நமது உடலையும் எழுப்பி, நமது ஆன்மாவோடு இணைத்து முடிவில்லா வாழ்வை வழங்குவார். அவ்வேளையில், உயிரோடு எஞ்சியிருப்பவர்களும் அவர்களோடு மேகங்களில் எடுத்துக் கொள்ளப்படுவோம் என்பதுதான் நாம் அறிந்த உண்மை. (1 தெச 4: 16-17, 2 கொரி 4:14) ஆகவே, மறுபிறவி அல்ல மறுவாழ்வான நிலைவாழ்வுதான் நமக் குரியது.

> இயேசு ஒருபோதும் நம் எதிர்பார்ப்புகளை இழிவுபடுத்துவதில்லை, மாறாக, அவை நிறைவேற அவர் நமக்கு உதவுகிறார். நாம் வாழ்க்கையில் எப்படி வெற்றிபெறுவது? என்று சிந்திக்கும்போது, அதற்கு இரண்டு முக்கியமான வழிகள் இருக்கின்றன என்பதை உங்களுக்குக் கூற விழைகின்றேன். முதலாவது, உயர்ந்த இலக்கு. இரண்டாவது, பயிற்சி
>
> திருந்தந்தை பிரான்சிஸ் (30-4-2023)

# அருள்பணி ஸ்டான்சுவாமி புதைக்கப்படவில்லை விதைக்கப்பட்டிருக்கிறார்

வத்திக்கான்: இந்தியாவின் பூர்வீகஇன மக்களிடையே இயேசுசபை அருள்பணி ஸ்டான் சுவாமி அவர்களின் பணியைத் தொடர்ந்து ஏற்று நடத்தும் நோக்கத்தில் இயேசு சபையினருடன் இணைந்து நண்பர்கள் குழுமம் ஒன்று உருவாக் கப்பட்டுள்ளது.

பூர்வீகக் குடிமக்களின் உரிமைகளுக்காகப் போராடியவேளையில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுடன் தொடர்பில் இருந்தார் என்ற பொய்க் குற்றச்சாட்டின் பேரில் 2020ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8ஆம் தேதி இந்திய தேசிய பயங்கரவாத தடுப்பு விசாரணை அமைப்பால் கைது செய்யப்பட்ட 84 வயதான இயேசுசபை அருள்பணி ஸ்டான் சுவாமி அவர்கள், 2021ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் தேதி சிறைத்தண்டனை காலத்தின்போதே மும்பை மருத்துவமனையில் காலமானார்.




அருள்பணி ஸ்டான் சுவாமி அவர்களால் துவக்கப்பட்ட Bagaicha என்ற இயேசு சபை அமைப்புடன் இணைந்துள்ள அவரின் நண்பர்கள், தோழமை அமைப்பு என்ற ஒன்றை உருவாக்கி பூர்வீக மக்களிடையே அருள்பணி ஸ்டான் சுவாமியின் பணியைத் தொடர உள்ளனர்.

பெண்கள், பூர்வீக இனத்தவர், தலித் சமூகத்தினர், புலம்பெயர்ந்தோர் ஆகியோரிடையே பணிபுரிவதைத் தங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளது, அருள்பணி ஸ்டான் சுவாமி பெயரிலான இந்தத் தோழமை இயக்கம்.

அருள்பணி ஸ்டான் சுவாமியின் கணனி யிருந்து எடுக்கப்பட்டதாக காவல்துறை கூறிய அனைத்துக் குற்ற நிரூபணங்களும் அவருக்குத் தெரியாமலேயே அவரது கணனியில் நிறுவப்பட்ட பொய் ஆதாரங் களாகும் என அண்மையில் நிரூபிக்கப் பட்டுள்ளது.

இயேசுசபை அருள்பணி ஸ்டான் சுவாமி மரணமடைந்துள்ள போதிலும், அவரின் குற்றமற்றத்தன்மையை நிரூபிக்க மும்பை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அருள்பணி ஸ்டான் சுவாமி அவர்கள் புதைக்கப்படவில்லை, விதைக்கப்பட் டிருக்கிறார் என சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சந்துரு அவர்களும், பூர்வீக மக்களின் உரிமைகளுக்காக அருள்பணி ஸ்டான் சுவாமிப் போரா டியதே ஆட்சியாளர்கள் மற்றும் பெரும் வர்த்தக நிறுவனங்களின் கோபத்திற்கு காரணமாகியுள்ளது என சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஹரிபரந்தாமன் அவர்களும் கூறியவை இங்கு குறிப்பிடத்தக்கன.

**கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்**

# நம் துணையாளரே, நமக்குத் துணை நிற்பார்!

பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறான இன்று நாம் வாசிக்கக்கேட்கும் இறை வார்த்தைகள், இயேசு நம்மை முழுவது மாக பாதுகாப்பதை எடுத்துக்கூறுகிறது.

இயேசு நம்மை மூன்று விதங்களில் திக்கற்றவர்களாய் விடாமல் காத்துக்கொள் கின்றார். அதில் முதலாவது விதம், நாம் அவருடைய கட்டளையை அல்லது அன்புக் கட்டளையை கடைப்பிடிப்பதன் மூலம், அவர் நம்மைத் திக்கற்றவர்களாய் விடாமல் காத்துக்கொள்கின்றார். இயேசுவின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதால், அவர் எப்படி நம்மைக் காக்கின்றார் என்ற கேள்வி எழலாம். இதற்கான பதில் இன்றைய நற்செய்தியில் இருக்கின்றது. இன்றைய நற்செய்தியின் இறுதியில் இயேசு, “என் கட்டளைகளை ஏற்றுக் கடைப் பிடிப்பவர் என்மீது அன்புகொண்டுள்ளார். என்மீது அன்புகொள்பவர்மீது தந்தையும் அன்புகொள்வார்” என்று கூறுகின்றார். தந்தைக் கடவுள் ஒருவரை அன்பு செய்கின்றார் எனில், அவரோடு கடவுள் உடனிருக்கின்றார் என்றுதான் பொருள். நாம் இயேசு நமக்குக் கொடுத்திருக்கும் கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழ்கி றோமா? அதன்மூலமாக இயேசுவின்மீது இருக்கும் நமது அன்பை வெளிப்படுத்து கிறோமா? என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். பல நேரங்களில் நாம் பெயரளவுக்கு கிறிஸ்தவர்கள் என்று வாழ்ந்துவிட்டு, அவரது கட்டளைகளை உதாசீனப்படுத்துகிறோம். அதனால்தான் இயேசு கூறுகிறார், “என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே எனச் சொல்பவ ரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி – கட்டளைகளின் படி – செயல்படுபவரே செல்வர்” என்று (மத் 7:21).

தூய ஆவியார் வழியாக, அவர் நம்மைத் திக்கற்றவர்களாய் விடமாட்டார். இது இரண்டாவது விதம். இயேசு, தூய ஆவியாரைப் பற்றி பேசும்பொழுது அவரைத் ‘துணையாளர்’ என்பார். இச்சொல்லுக்கு ஆலோசகர், தேற்றுபவர், உதவிபுரிபவர் ஆகிய பொருள்களெல்லாம் இருக்கின்றன. தூய ஆவியார் நமக்கு ஆலோசகராக, நம்மைத் தேற்றுபவராக, நமக்கு உதவிபுரிபவராக இருந்தால், நாம் ஆதரவற்றவர்களாக, திக்கற்றவர்களாக இல்லை என்பது தெளிவு! ஆம். இயேசு, சீடர்களுக்கு மற்றொரு துணையாளரைத் தருமாறு தந்தையிடம் கேட்டார். அவர் தந்தையிடம் கேட்டுக்கொண்டது போன்று, தந்தையும் தூய ஆவியாரைப் பெந்தக் கோஸ்து நாளில் அருளினார். இவ்வாறு இயேசு தூய ஆவியாரை நமக்கு தருவதன் வழியாக, நம்மைத் திக்கற்றவர்களாய் விடாமல் காக்கின்றார்.

தூய ஆவியால் கடவுள் மனிதனாகப் பிறந்தார். தூய ஆவியினால் தீய ஆவிகளை விரட்டினார். நோய்களிலிருந்து குணம் கொடுத்தார். அருஞ்செயல்களை தூய ஆவியின் ஆற்றலோடு செய்தார். தூய ஆவியார் இயேசுவோடு இருந்ததால் சோதனைகளை வென்றார். தூய ஆவியானவர் இயேசுவை உயிர்த்தெழச் செய்தார். அதே தூய ஆவியானவனரே நமக்குத் துணையாகத் தந்தையிடம் பரிந்து பேசி அவர் தொடங்கிய திருஅவைக்கு அனுப்பி வைத்தார்.

இவ்வாறு இயேசு அன்புக் கட்டளையின் வழியாகவும் தூய ஆவியாரின் வழியாகவும் தன்னுடைய உடனிருப்பின் வழியாகவும் நம்மைத் திக்கற்றவர்களாய் விடாமல் காக்கின்றபொழுது, நாம் எதற்குக் கலக்கமுறவேண்டும் என்பதே நம்முன் இருக்கின்ற கேள்வி. ஆகையால், நாம், இயேசுவின் உடனிருப்பை உணர்ந்தவர் களாய் கலக்கத்தைப் போக்கி, நம்பிக்கையோடு நம்முடைய வாழ்க்கையை எதிர்கொள்வோம்.

*த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா.*

**பாஸ்கா 6 ஆம் வாரம் - ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | திப 8: 5-8, 14-17 |
| தி.பா | 66: 1-3a. 4-5. 6-7a. 16,20 |
| 2 வாசகம் | 1 பேதரு 3: 15-18 |
| நற்செய்தி | யோவான் 14: 15-21 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை- வாரம் 2**